நக. எண் .2650 /2021/அ3 நாள் .12.2021.

# தமிழ் நாடு வருவாய்த்துறை
# திருவள்ளூர் மாவட்டம்
# கும்மிடிப்பூண்டி வட்டம்
# அறிவிக்கை (Notification)

## கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

திருவள்ளூர் மாவட்டத்தில் கீழ்கண்டுள்ளவாறு, வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் அடங்கிய கிராமங்களுக்கு கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தகுதியான விண்ணதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கிராம உதவியாளர் - கும்மிடிப்பூண்டி (14) காலிப்பணியிடங்கள்

| வ. எண் | வருவாய் வட்டத்தின் பெயர் | கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ள வருவாய் கிராமத்தின் பெயர் | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1) | கும்மிடிப்பூண்டி | 04. பூவலை | 37 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| | | 05.கண்ணம்பாக்கம் | 38 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) |
| | | 07.சாணபுத்தூர் | 39 | பொதுப்போட்டி |
| | | 47..சிந்தலகுப்பம் | 40 | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம் |
| | | 53.சுண்ணாம்பு குளம் | 41 | பொதுப்போட்டி |
| | | 54.ஓபசமுத்திரம் | 42 | ஆதிதிராவிடர் |
| | | 55.மேலக்கழனி | 43 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| | | 57.சென்னாவரம் | 44 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) |
| | | 58.நத்தம் | 45 | பொதுப்போட்டி |
| | | 61.சின்ன ஓபுளாபுரம் | 46 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| | | 69.அயநல்லூர் | 47 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 72.ஏனாதிமேல்பாக்கம் | 48 | பொதுப்போட்டி |
| | | 77..புதுகும்மிடிப்பூண்டி | 49 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) |
| | | 78.வேற்காடு | 50 | பழங்குடியினர் |

<u>தகுதிகள்:-</u>

1) காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

2) தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட கிராமத்தில் இல்லாவிட்டால் அக்கிராமத்தின் எல்லையை ஒட்டிய கிராமத்திலிருந்து விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

| இனம் | வயது (01.01.2022 அன்று) | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2022 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும் சீர்மரபினர்)/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2022 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |
| அரசு பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்ச வரம்பினை இரண்டு ஆண்டுகள் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. | | |

<u>நிபந்தனைகள்</u>

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளை கண்டிப்பாக இணைத்தல் வேண்டும்.

2) மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

3) விண்ணப்பதாரர்கள் கும்மிடிப்பூண்டி வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4) இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5) ஒவ்வொரு கிராம உதவியார் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

6) அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்

7) கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் நேரிலும் மற்றும் இணையதளத்திலும் 20.01.2022 (வியாழன்கிழமை) அன்று மாலை 5.45 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு Special Time Scales of Pay Matrix Level 6 (Minimum Rs.11,100/- Maximum Rs.35,100/-) ஊதிய ஏற்ற முறையில் அடிப்படை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியர் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 20.01.2022 (வியாழன்கிழமை) மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். இந்த தேதிக்கு பின்னர் காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்.

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள (National Career Service Portal) திருவள்ளூர் மாவட்ட இணையதள tiruvallur.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பத்திரிக்கைச் செய்தி மூலம், திருவள்ளூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கோப்பு எண் நக.அ1/25627/2020, நாள் 10.02.2021-ன்படி கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ள நிகழ்வு நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. அப்போது பெறப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது பெறப்படும் விண்ணப்பங்களுடன் சேர்த்து தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும். ஏற்கெனவே பெறப்பட்ட 1260 எண்ணிக்கையிலான விண்ணப்பங்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

01/01/2022

வட்டாட்சியர்,
கும்மிடிப்பூண்டி

01/01/22

01/01/2022

ந.க. 2650/2021/அ3
நாள்: .01.2022

வட்டாட்சியர் அலுவலகம்,
கும்மிடிப்பூண்டி

# அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 14 கிராம உதவியாளர் பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது.

| வ. எண் | இன சுழற்சி | பட்டியல் வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமையற்றவர் | பொது/ ஆண்/ பெண் | விதவை/ முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1. | 37 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் - (NP) | பொது | - |
| 2. | 38 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர்- (NP) (Ex-Ser) | ஆண் | இராணுவத்தினர் |
| 3. | 39 | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர்- NP(W) | பெண் | - |
| 4. | 40 | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம் | முன்னுரிமையற்றவர்- NP (W)(DW) | பெண் | விதவை |
| 5. | 41 | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர்- (NP) | பொது | - |
| 6. | 42 | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர்- (NP) | பொது | - |
| 7. | 43 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர்- (NP)(W) | பெண் | - |
| 8. | 44 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர்- (P) | பொது | - |
| 9. | 45 | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர்- (NP) | பொது | - |
| 10. | 46 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர்- (NP) (Ex-Ser) | ஆண் | இராணுவத்தினர் |
| 11. | 47 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர்- (NP)(W) | பெண் | - |
| 12. | 48 | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர்- (NP)(W) | பெண் | - |
| 13. | 49 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர்- (NP) | பொது | - |
| 14. | 50 | பழங்குடியினர் | முன்னுரிமை பெற்றவர்- (P) (DW) | பெண் | விதவை |

மேற்காணும் பணியிடத்திற்கான ஊதிய ஏற்றமுறை: Special Time Scales of Pay Matrix Level 6 (Minimum Rs.11,100/- Maximum Rs.35,100/-

மேற்காணும் பணியிடங்களுக்கு

- கல்வித்தகுதி 5-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- 01.01.2022 அன்றைய தேதியில் 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) ஆகியோருக்கு 37 வயதும், இதர வகுப்பினருக்கு 32 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் கும்மிடிப்பூண்டி வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதியும், விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிவரம், கல்வித்தகுதி சான்றுகள், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பக பதிவு விவரம் ஆகியவற்றின் நகல்களுடன், சுயவிலாசம் எழுதப்பட்ட ரூ.25/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட 25X10 செ.மீ அளவுள்ள உறை ஆகியவற்றுடன் விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வரும் 20.01.2022 மாலை 05.45 மணிக்குள் கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பிவைத்திட வேண்டும் எனவும், அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும், தமிழ்நாடு கிராம உதவியாளர் பணியமைப்பு விதிகளின் படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (பத்திரிக்கைச் செய்தி மூலம், திருவள்ளூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கோப்பு எண் நக.அ1/25627/2020, நாள் 10.02.2021-ன்படி கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ள நிகழ்வு நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. அப்போது பெறப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது பெறப்படும் விண்ணப்பங்களுடன் சேர்த்து தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்)

10/01/2022

வட்டாட்சியர்,
கும்மிடிப்பூண்டி

01/01/22    01/01/2022

# திருவள்ளூர் மாவட்டம் , கும்மிடிப்பூண்டி வட்டம்

## கிராம உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரர் புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | |
| 3. | இருப்பிட முகவரி | |
| 4. | கைப்பேசி எண் | |
| 5. | பிறந்த தேதி மற்றும் வயது (01.01.2022 அன்றய தினத்தில்) | |
| 6. | சாதி / மதம் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7. | ஆதார் எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | குடும்ப அட்டை எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | கல்வித்தகுதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 10. | இருப்பிட சான்று (சன்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 11. | மாவட்ட வேலைவாய்ப்பு பதிவெண் (பதிவு செய்யப்பட்டிருப்பின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |

நாள்:

இடம்:

விண்ணப்பதாரர் கையொப்பம்